# OS . NO. 75 /2006

**D.W.3 திருமதி.ராஜஸ்ரீ** 19.01.2021

**3வது பிரதிவாதி (தனலெட்சுமி) தரப்பில் கு.வி தொடர்ச்சி**

இந்த வழக்கில் கண்டுள்ள 1வது பிரதிவாதி பேச்சியம்மாள் எனது பாட்டி மற்றும் மாமியார். பேச்சியம்மாளுக்கு ஏற்கனவே சோலையப்பனை திருமணம் செய்து அதன்மூலமாக ஆனந்தம் என்ற ஒரு பெண்ணும் ஜெயபிரகாஷ் என்ற ஒரு ஆணும் இருந்தனர். மேற்படி இருவரும் தற்போது உயிருடன் இல்லை. ஜெயபிரகாஷ் இந்த வழக்கில் 2வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார். ஆனந்தம் என்பவர் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. ஜெயபிரகாஷ் மற்றும் ஆனந்தம் ஆகியோர்களுக்கு திருமணமாகிவிட்டது. ஆனந்தத்திற்கு கிருஷ்ணமூர்த்தி, பத்மா, தேவிகா, பாலு, ரவி ஆகிய வாரிசுகள் உள்ளனர். ஜெயபிரகாஷ் என்பவர் சண்முகம் பிள்ளை என்பவருக்கு பிறந்த மகனல்ல. பேச்சியம்மாள் என்பவருக்கு பேச்சியம்மாள் என்பற பெயரை தவிர மீனாட்சி என்ற மற்றொரு பெயரும் உள்ளது. ஜெயபிரகாஷ் என்பவருக்கும் எனது தாயாரான 3வது பிரதிவாதியான எனது தாயாருக்கும் ஒன்றுவிட்ட அண்ணன் தங்கை என்ற உறவை தவிர வேறு உறவு எதுவுமில்லை. ஆனந்தம் வாரிசுகளுக்கு எங்கள் குடும்பத்தாருடன் திருமணம் நடைபெற்றது. தேவிகா என்பவரின் மகளை விஜயலெட்சுமி மகன் சண்முகவேல் என்பவருக்கு திருமணம் செய்யப்பட்டது. ஜெயபிரகாஷ் என்பவர் சண்முகம்பிள்ளைக்கு பிறந்த குழந்தையல்ல என்பதற்கும் ஆனந்தம் என்ற நபர் சோலையப்பனுக்கு பிறந்த குழந்தை என்றும் பேச்சியம்மாள் என்பவருக்கு இரண்டு கணவர் மூலமாக பிறந்த குழந்தைகள் நீதிமன்றத்தில் ஒரே தகப்பனாருக்கு பிறந்த குழந்தையாக அசல் வழக்கில் காட்டப்பட்டது தொடர்பான சட்சைக்கு நீதிமன்றம் மூலம் மரபணு பரிசோதனை செய்வதற்கு எனது தரப்பில் எந்தவித ஆட்சேபணையுமில்லை.